## யூலை- 18- செவ்வாய்

### புனித கமிலஸ் லெலீஸ்

**சேற்றில் நான் அமிழிவதிலிருந்து என்னைக் காத்தருளும்: என்னை வெறுப்போரிடமிருந்தும் ஆழ்கடலிலிருந்தும் என்னை விடுவித்தருளம். திபா. 69:14**

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 2 : 1 – 15

இவ்வாறிருக்க, லேவி குலத்தவர் ஒருவர் லேவி குலப்பெண்ணொருத்தியை மணம் செய்து கொண்டார்.அவள் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள் அது அழகாயிருந்தது என்று கண்டாள் மூன்று மாதங்களாக அதனை மறைத்து வைத்திருந்தாள்.இதற்கு மேல் அதனை மறைத்து வைக்க இயலாததால், அதனுக்காகக் கோரைப்புல்லால் பேழை ஒன்று செய்து அதன்மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள் குழந்தையை அதனுள் வைத்து நைல்நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டுவைத்தாள்.அதற்கு என்ன ஆகுமோ என்பதை அறிந்துகொள்ளக் குழந்தையின் சகோதரி தூரத்தில் நின்று கொண்டிருந்தாள்.அப்போது பார்வோனின் மகள் நைல்நதியில் நீராட இறங்கிச் சென்றாள். அவள் தோழியரோ நைல் நதிக்கரையில் உலாவிக்கொண்டிருந்தனர். அவள் நாணலிடையே பேழையைக் கண்டு தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதை எடுத்தாள் அதைத் திறந்தபோது ஓர் ஆண் குழந்தையைக் கண்டாள் அது அழுதுகொண்டிருந்தது.அதன் மேல் அவள் இரக்கம் கொண்டாள். ”இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று” என்றாள் அவள். உடனே குழந்தையின் சகோதரி பார்வோனின் மகளை நோக்கி,”உமக்குப் பதிலாகப் பாலூட்டி இக்குழந்தையை வளர்க்க, எபிரேயச் செவிலி ஒருத்தியை நான் சென்று அழைத்து வரட்டுமா?” என்று கேட்டாள்.பார்வோனின் மகள் அவளை நோக்கி, ”சரி. சென்று வா” என்றாள். அந்தப் பெண் சென்று குழந்தையின் தாயையே அழைத்து வந்தாள்.பார்வோனின் மகள் அவளை நோக்கி, ”இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல். எனக்குப் பதிலாக நீ பாலூட்டி அதனை வளர்த்திடு. உனக்குக் கூலி கொடுப்பேன்” என்றாள். எனவே குழந்தையை எடுத்துச் சென்று அதனைப் பாலூட்டி வளர்த்தாள் அப்பெண்.குழந்தை வளர்ந்தபின் அவள் பார்வோனின் மகளிடம் அவனைக் கொண்டுபோய் விட்டாள். அவள் அவனைத் தன் மகன் எனக்கொண்டாள். ”நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்” என்று கூறி அவள் அவனுக்கு ”மோசே” என்று பெயரிட்டாள். அக்காலத்தில் மோசே வளர்ந்துவிட்டபோது தம் இனத்தவரிடம் சென்றிருந்தார் அவர்களுடைய பாரச் சுமைகளையும் பார்த்தார் மேலும், தம் இனத்தவனான எபிரேயன் ஒருவனை எகிப்தியன் ஒருவன் அடிப்பதையும் கண்டார். சுற்றுமுற்றும் பார்த்து, யாருமே இல்லையெனக் கண்டு, அந்த எகிப்தியனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்து விட்டார்.அடுத்த நாள் அவர் வெளியே சென்றபோது, எபிரேயர் இருவருக்கிடையே கைகலப்பு நடந்து கொண்டிருந்ததைக் கண்டார் குற்றவாளியை நோக்கி ”உன் இனத்தவனை ஏன் அடிக்கிறாய்?” என்று கேட்டார்.அதற்கு அவன், ”எங்கள்மேல் உன்னைத் தலைவனாகவும் நடுவனாகவும் நியமித்தவன் எவன்? எகிப்தியனைக் கொன்றதுபோல் என்னையும் கொல்லவா நீ இப்படிப் பேசுகிறாய்?” என்று சொன்னான். இதனால் மோசே அச்சமுற்றார் ”நடந்தது தெரிந்துவிட்டது உறுதியே” என்று சொல்லிக்கொண்டார்!இச்செய்தியைப் பார்வோன் கேள்வியுற்றபோது மோசேயைக் கொல்லத் தேடினான். எனவே மோசே பார்வோனிடமிருந்து தப்பியோடி, மிதியான் நாட்டில் குடியிருக்க வேண்டியதாயிற்று.

**பதில்பாடல் :** கடவுளை நாடித் தேடுவோரே உங்கள் உள்ளம் ஊக்கம் அடைவதாக

### நற்செய்தி : மத்தேயு 11 : 20 – 24

அக்காலத்தில் இயேசு வல்ல செயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார்.”கொராசின் நகரே, ஐயோ! உனக்குக் கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக் கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர்.தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையை விட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னிடம் செய்யப்பட்ட வல்ல செயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் அது இன்றுவரை நிலைத்திருக்குமே!தீர்ப்பு நாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையை விட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.” என்றார்

**தியானம்:** நாம் அதிகமதிகமாக நேசிப்பவர்களுக்காக பலவித உதவி, ஒத்தாசைகளை மனச்சலிப்பின்றி செய்வதுண்டு. அவர்கள் எமதன்பை மறந்து செயற்படும் போது நாம் வெறுப்படைந்து, கோபப்படுவது எமது இயல்பு. எனினும், இரக்கத்தின் தேவன், யேசுவுக்கும் கோபம், வெறுப்பு சபிக்கின்ற அளவிற்கு கொடியவரா? இப்படியான கேள்விகள் இன்றைய நற்செய்தியை வாசிப்போர் மனதினில் எழலாம். அப்படியாயின், இறைமகன் இயேசுவின் கருணை, இரக்கம் எங்கே போய்விட்டது? எமது பாவங்களுக்காக நாம் அதிகமதிகம் வருந்தி அவரது மன்னிப்பை நாடவேண்டுமா? இன்றைய நற்செய்தியில் இயேசு தாம் போதித்த கலிலேயாக் கடற்கரை ஓரங்களில் இருந்த கொராசின், பெத்சாய்தா நகர மக்கள் மனம்மாறவில்லை என வருந்தி சபிக்கும் அளவிற்கு வேதனையுறுகின்றார். அப்படியாயின், இயேசுவின் வேதனை மிகுந்த கொடியபாடுகள், மரணம் மற்றும் உத்தானத்தின் பின்னர் நாம் இன்னமும் மனம் மாறாது வாழும் போது எவ்வளவு மிகப் பெரிய துரோகத்தை செய்கின்றோம். இயேசு எம்மாலே முடியாத காரியத்தை செய்யமுன் வருமாறு எம்மை நிர்ப்பந்திக்கின்றாரா? மறுப்போமாயின், “தீர்ப்புநாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டணையை விட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும்” எனவும் நற்செய்தி எச்சரிக்கின்றது. எனவே, இறைமகன் இயேசுவின் பாடுகளை அனுதினமும் நினைவில்கொள்வோம். அடிக்கடி மனம்வருந்தி நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வோம். கூடியவரையில் திருப்பலியில் தகுதியுடன் பங்குபெற்றி திருவிருந்தில் அவரோடு சமபந்தி போசனம் செய்ய ஆயத்தநிலையில் இருப்போம். இறைத்தன்மையுடைய இயேசு தமது போதனையால் மட்டுமல்ல இதனது வாழ்வாலும் எமக்கு நன்நெறியின் பாதையைக் காட்டியுள்ளார். அந்த வாழ்வினை நாமும் வாழுவதற்கு முன்வருவோமா?. இறுதிக்காலம் இதுவென உணர்ந்து முன் மதியோடு நன்நெறியில் நடப்போம். இல்லையெனில் நாங்கள் விண்ணரசில் புகமுடியாது.